செ.வெ.எண்.58 நாள்:26.06.2020

**நீலகிரி மாவட்டம் உதகை மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட திறந்தவெளி விளையாட்டு அரங்கில் இன்று (26.06.2020) உதகை மார்கெட் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட கடை வியாபாரிகளுக்கு நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பாக ரூ.20.50 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.**

-------------

நீலகிரி மாவட்டம் உதகை மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட திறந்தவெளி விளையாட்டு அரங்கில் இன்று (26.06.2020) உதகை மார்கெட் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட கடை வியாபாரிகளுக்கு நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பாக ரூ.20.50 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கி கூறியதாவது,

உதகை மார்கெட் பகுதியில் கடந்த (22.06.2020) அன்று நள்ளிரவில் எதிர்பாராத விதமாக தீ பிடித்து அப்பகுதியிலுள்ள மளிகை கடைகள். காய்கறி கடைகள் உள்ளிட்ட 81 கடைகள் தீயில் சேதமடைந்தன. உடனடியாக தீயணைப்பு வாகனம் மூலம் மேலும் தீ பரவாமல் தடுக்கப்பட்டது.அதனை தொடர்ந்து எரிந்த கடைகளின் பாகங்கள் மற்றும் அங்கு குவிந்திருந்த பொருட்களை அகற்றும் பணி நகராட்சி பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. கொரோனா வைரஸ் நோய்தொற்றின் காரணமாக வருமானம் இல்லாத இச்சூழ்நிலையில் ஏற்பட்ட இத்தீவிபத்தினால் அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. எனவே பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு உடனடியாக கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இழப்பீடு தொகை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் ஏப்ரல் 2020 முதல் இன்று வரை சுய உதவிகுழுக்களுக்கு ரூ.9 கோடி வரை கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.விவசாயிகளுக்கு ரூ.7 கோடி மதிப்பில் பயிர்கடன்களும், வியாபாரிகளுக்கு ரூ.2.50 கோடி மதிப்பில் சிறு வணிக கடன்களும், என ஆக மொத்தம் ரூ.18.50 கோடி மதிப்பில் 3 மாதங்களில் நீலகிரி மாவட்ட மக்களுக்கு அவர்களின்

வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. சுய தொழில் மற்றும் வியாபாரிகளை ஊக்கமளிக்கும் வகையில் இக்கடனுதவிகளை மத்திய கூட்டுறவு வங்கி வழங்கி செயல்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து முதற்கட்டமாக 41 பயனாளிகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.20.50 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி, பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.கப்பச்சி டி.வினோத், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.வசந்தா, உதகை நகராட்சி ஆணையாளர் திருமதி.சரஸ்வதி, நகராட்சி பொறியாளர் திரு.ரவி, மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் திரு.கனகராஜ் மற்றும் வியாபாரிகள் சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.